விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 365 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 04 வெள்ளிக்கிழமை (19.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு
# புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்

### தமிழக முதலமைச்சரிடம் தமிழ்த் தேசியப் பேரவை

*(சென்னை)*

ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். இதற்கு இந்திய மத்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழக முதலமைச்சரிடம் தமிழ்த் தேசியப் பேரவை வலியுறுத்தியுள்ளது. *(14ஆம் பக்கம் பார்க்க)*



## எரிவாயுவுக்கு தட்டுப்பாடில்லை
### அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

நாட்டில் எரிவாயுவுக்கு தட்டுப்பாடில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பிறந்து 8 நாட்களான
# ஆண் சிசு உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பிறந்து 8 நாட்களான ஆண் சிசு ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

மன்னாரைச் சேர்ந்த

15ஆம் பக்கம் பார்க்க

## பேரிடர் பாதிப்பை சீர்செய்ய ரூ.500 பில்லியன் ஒதுக்கீடு
### சபையில் பிரதமர் ஹரிணி அறிவிப்பு



(கொழும்பு)

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக 500 பில்லியன் ரூபாய் குறைநிரப்பு மதிப்பீட்டு பிரேரணை பிரதமர் ஹரிணி அமர

15ஆம் பக்கம் பார்க்க

## கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்க
### ஸ்டாலினிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரை சட்டவிரோதக் கட்டடம்
# அறிவித்தல் பலகையை நாட்ட
### வலி.வடக்கு பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தையிட்டி விகாரை சட்டவிரோதக் கட்டடம் என அறிவித்தல் பலகையை நாட்ட வலி.வடக்கு பிரதேச சபை புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

யாழ்.வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று (18) பிரதேச சபையின் தவிசாளர் சோம சுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தையிட்டி தெற்கில் பொதுமக்களின் காணியில் சட்டவிரோதமாக அமைந்துள்ள "திஸ்ஸ விகாரை"

14ஆம் பக்கம் பார்க்க

## யாழில் உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக் காணி நன்கொடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான உள்ளக விளையாட்டரங்கை அமைப்பதற்கான காணியை தான் நன்கொடை

15ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறையில்
# தீக்காயங்களுக்குள்ளான 15 வயது மாணவி மரணம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறையில் தீக்காயங்களுக்குள்ளான 15 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பார்த்தீபன் கவிசனா (வயது-15) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவியின் தாயார் அந்த மாணவியை பாடங்களைப் படிக்குமாறு

15ஆம் பக்கம் பார்க்க

## 2026 ஜனவரி முதல்
# வடக்கு, கிழக்கு ரயில் சேவைகள்
### மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

சேதமடைந்த புகையிரதப் பாதைகள் வெகுவாகப் புனரமைக்கப்படுகின்றன. 2026.01.01ஆம் திகதியிலிருந்து வடக்கு

14ஆம் பக்கம் பார்க்க

## கணக்காய்வாளர் நாயகமாக முன்னாள் இராணுவ அதிகாரி
### ஜனாதிபதியின் பரிந்துரை அரசியலமைப்புப் பேரவையால் நிராகரிப்பு

(கொழும்பு)

புதிய கணக்காய்வாளர் நாயகமாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி கேணல் ஓ. ஆர்.ராஜசிங்கவை நியமிக்க ஜனாதிபதி செய்த சிபாரிசினை அரசியலமைப்புப் பேரவை நிராகரித்துள்ளது.

சபாநாயகர் தலைமையில் கூடிய அரசியலமைப்பு பேரவைக் கூட்டத்தில் இந்தத்


14ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 - 04 - 1957



மறைவு
17 - 12 - 2025

## விஸ்வப் பிரம்மஸ்ரீ தம்பிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்
## (கணக்காளர் - நல்லூர் கந்தசுவாமி கோவில்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தம்பிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த (17.12.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மகனும் செல்வநாயகம் - கனகாம்பிகை தம்பதியரின் மருமகனும் திலகவதி (யாழ்.மாநகர சபை நூலகம்) அவர்களின் அன்புக் கணவரும் அமரர் சாரங்கன் மற்றும் பகீரங்கன் (கொமர்ஷல் வங்கி, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி அவர்களின் அன்பு மாமனும் யாகவியின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், குணரட்ணம், இராசரட்ணம் மற்றும் நாகேஸ்வரி, இராசலட்சுமி, கமலாதேவி, யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற உத்தமசீலன் மற்றும் சுப்பிரமணியம், சண்முகநாதன், காலஞ்சென்ற மீனலோஜினி மற்றும் சந்தானலட்சுமி, முத்துக்குமார், பத்மாவதி, செந்தில்குமார் ஆகியோரின் மைத்துனரும் சிதம்பரநாதன், பவளராணி, ரஜனி ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நீர்வேலி வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காமாட்சி அம்மன் கோவிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(C-4611)

தகவல் : குடும்பத்தினர்
077 147 9333 (மகன்)

# மரண அறிவித்தல்



## தில்லைநாதன் பத்மநாதன்

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் பத்மநாதன் அவர்கள் நேற்று (18.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் - சிரோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகி அவர்களின் அன்புக் கணவரும் பரிமளகாந்தன், பரஞ்சோதிநாதன், காலஞ்சென்ற பஞ்சலட்சுமி, பாக்கியசீலன் (சிறிகாந்தன்), பற்குணன், காலஞ்சென்ற பரிமேழழகன் ஆகியோரின் மூத்த சகோதரனும் பரிமளகாந்தி (றாதா), திருமாறன், மணிமாறன், தமிழ்மாறன், தமிழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிதரன், அனுறாதா, டயானி, யாமிலா, கோபிமணளன் ஆகியோரின் மாமனாரும் பூபதியம்மா, சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சுஜா, சஜன், துதிகரன், அனுஸ்கா, அத்விகா, விஷால், யஸ்மிதா, மாதங்கி, மாளவிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அ்னைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(6320)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## கந்தசாமி ஆனந்தமூர்த்தி
## (வைகுந்தம்)

நாகர்கோவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஆனந்தமூர்த்தி (வைகுந்தம்) அவர்கள் கடந்த (17.12.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வ.வ.கந்தசாமி - செல்லாச்சி தம்பதியரின் இளைய புதல்வனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் நவமணி தம்பதியரின் மூத்த மருமகனும் சாந்தி (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் சஞ்ஜியா (ஆசிரியை), வைகரன் (பொறியியலாளர்), சங்கீதா (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமானந்தராசா (தபால் ஊழியர்), நிசாங்கர் (விரிவுரையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்னலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற அன்னக்கொடி, ஆனந்தராசா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), அன்னகேசரி (ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்), அன்னரூபி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகேசு (அமெரிக்கா), மாலினி, சாந்தி, புவனேந்திரம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஹரிணி, ஆருதி, இனியா ஆகியோரின் செல்லப் பேரனும் சக்தி, ராஜ்குமார் (கனடா), சிவாயநம (கனடா), உதயசங்கர் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை நாகர்கோவில் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாகர்கோவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாகர்கோவில் மேற்கு,
நாகர்கோவில்.

(C-4608)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் ஆர்வம் காட்டாத மக்கள்!

## எச்சரிக்கை விடுக்கும் சுகாதார அதிகாரிகள்

(கொழும்பு)

**யாழ்ப்பாணம் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகமாக இருப்பதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

டெங்கு பரவலைக் குறைப்பதற்கான பொதுமக்களின் ஒத்துழைப்பு குறைவாக இருப்பதே நோய் அதிகரிப்பதற்கு காரணமென சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நஜித சுமனசேன தெரிவித்துள்ளார்.

பல மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் டெங்குவை உருவாக்கும் நுளம்பு குடம்பிகளின் பரவல் அதிகரித்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


நுளம்புகள் பெருகும் இடங்களை அகற்றிச் சுத்தம் செய்வதில் பொதுமக்களின் ஆர்வம் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம், கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் டெங்கு நுளம்புகளின் அபாயம் அதிகரித்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சில மாவட்டங்களில், நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களை சுத்தம் செய்யுமாறு குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதாகவும், இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது, சுமார் 25-30 சதவீதம் பேர் இதில் ஆர்வம் காட்டவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும், டெங்கு நோயை கட்டுப்படுத்த மக்களிடையே ஆர்வம் இல்லாத காரணத்தினால், ஜனவரி முதல் வாரத்தில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் சுகாதார மருத்துவ அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இதற்கு பொது மக்களின் பங்களிப்பு வேண்டும் எனவும் சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நஜித சுமனசேன மேலும் தெரிவித்துள்ளார். (நி)



## கட்சித் தலைமையிலிருந்து விலகத் தயார் - ரணில்

(கொழும்பு)

கட்சித் தலைமையிலிருந்து விலகத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிறிகொத்த - பிட்டகோட்டேயில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்த ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைய வேண்டும் என்பதே எனது விருப்பம்.

இது தொடர்புடைய பேச்சுக்களின் போது, தான் தலைமைப் பதவியில் இருந்து விலகி சஜித் அல்லது வேறு ஒருவருக்கு தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்ற முன்மொழிவு முன்வைக்கப்பட்டால், செயற்குழு அதற்கு ஆதரவாக இருந்தால், அதில் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, இந்த பதவி விலகலில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் இது விரைவில் முடிவுக்கு வர வேண்டும்," என்று ரணில் விக்கிரமசிங்க செயற்குழுவிடம் மேலும் தெரிவித்தார். (நி)

## ஒன்பது வளைவு பாலம் மண்சரிவு அபாயத்தில்

(கொழும்பு)

டித்வா சூறாவளி தாக்கத்தால் ஏற்பட்ட அதிதீவிர வானிலை காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த தெமோதர "ஒன்பது வளைவு" பாலம் அமைந்துள்ள பகுதி மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.


குறித்த பகுதியில் புதிய சுற்றுலா வலையமைப்பொன்றை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக அங்கு நிர்மாணிக்கப்பட்டு வந்த சில கட்டடங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் குரே தெரிவித்துள்ளார்.

ஒன்பது வளைவுப் பாலத்தை மின் ஒளியூட்டல் மற்றும் புதிய சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட இந்த திட்டம், இவ்வருட இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் கட்டடச் சேதங்கள் காரணமாக, நிர்மாணப் பணிகளைத் திட்டமிட்டபடி நிறைவு செய்வதில் தாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தத் திட்டத்தை எக்காரணம் கொண்டும் கைவிடும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பாதிப்புகளைச் சீர் செய்து, பணிகளை விரைவுபடுத்தி அடுத்த ஆண்டில் (2026) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக இதனைத் திறந்து வைக்க எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)



## இறம்பொடை மண்சரிவிலிருந்து மீட்கப்பட்ட பெண்ணின் கால்

(நுவரெலியா)

அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலை அடுத்து மலையகத்தில் பல பகுதிகளில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டு பலரின் உயிர் பரிதாபமாக பறிபோனது.

இவ்வாறு மண்சரிவில் சிக்குண்டவர்களை மீட்கும் பணி நடைபெற்றபோதிலும் இருவரைத் தவிர வேறெவரும் உயிருடன் மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் கொத்மலை - இறம்பொடை பகுதியில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் சிக்கிய பெண்ணொருவருடையது என சந்தேகிக்கப்படும் காலின் ஒரு பகுதி நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொத்மலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இந்திக லலித் தெரிவித்தார்.

மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் மண்ணுக்குள் கால் ஒன்று புதைந்திருப்பதாக அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் குறித்த உடல் பாகம் மீட்கப்பட்டது.

கொத்மலை - இறம்பொடை பகுதியில் ஏற்பட்ட இந்த பாரிய மண்சரிவில் சிக்கிய 27 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதுடன், மேலும் 21 பேர் காணாமல் போயுள்ளனர்.

இதேவேளை, மண்சரிவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த வான் மற்றும் லொறி என்பனவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி)

## தொடருந்து சேவைகள் ஜனவரி முதல் வழமைக்கு

### பாராளுமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சீரற்ற வானிலை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த தொடருந்து சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான கால அட்டவணையைப் போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அவரது அறிவிப்பின்படி தொடருந்து சேவைகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதிகள் வருமாறு,

டிசம்பர் 20 முதல் பதுளை - அம்பேபுஸ்ஸ இடையிலான மலையக தொடருந்து சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனவரி 1 முதல் தொடருந்து சேவைகள் வடக்கு மார்க்கமாக காங்கேசன்துறை வரை நீடிக்கப்படும். புத்தளம் தொடருந்து மார்க்கத்தின் சேவைகள் சிலாபம் வரை விரிவுபடுத்தப்படும்.


மட்டக்களப்பு தொடருந்து மார்க்கம் முழுமையாகத் திறக்கப்பட்டு தொடருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பும்.

பெப்ரவரி 1 முதல் மன்னார் மற்றும் தலைமன்னார் நோக்கிய தொடருந்து சேவைகள் முழுமையாக இயங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய அனர்த்தங்களால் தொடருந்து பாதைகளில் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்த பின்னரே இந்தச் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.11.2025 (சனிக்கிழமை) அன்று இறைபதமடைந்த கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும் பூநகரி முன்னாள் கோட்டக்கல்விப்பணிப்பாளருமாகிய எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்
### நாகலிங்கம் சோதிநாதன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 20.12.2025 (சனிக்கிழமை) காலை கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 22.12.2025 (திங்கட்கிழமை) பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சாந்தி"
இல. 08. 2ஆம் குறுக்குத்தெரு
கனகபுரம், கிளிநொச்சி.

(C-4614)

தகவல்:
குடும்பத்தினர்

## உயர்தர மாணவர்களுக்கு ஆங்கிலக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)


வடமாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற STEPS நிறுவனத்தினால் 2025 க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான முதலாவது ஆங்கிலக் கற்கைநெறி (Foundation English for School levers - 210 மணித்தியாலங்கள் - 20 நாட்கள்) எதிர்வரும் டிசம்பர் மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதால் ஆர்வம் உள்ள மாணவர்கள் 22.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் வீதியில் அமைந்துள்ள STEPS நிறுவனத்தில் (யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்) நேரிலோ அல்லது 0212224580 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது stepsmoe@gmail.com என்ற முகவரி மூலமாகவோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஒரு பிரிவில் மாணவர் எண்ணிக்கை 24 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவு செய்யும் ஒழுங்கில் மற்றைய பிரிவுகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

கற்கை நெறிக் கட்டணமாக ரூபா 25 ஆயிரம் அறவிடப்படும். கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படும் என வடக்கு மாகாணக்கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் அறிவித்துள்ளார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் **யோகநாதன் மகேஸ்வரி**
(வரியப்புலம் சுன்னாகம்)




பிறப்பு: 07.11.1951 இறப்பு: 18.12.2025

எமது பாடசாலையின் வணிக பாட ஆசிரியர் வே.ஜீவரூபன் அவர்களின் மாமியார் (மனைவியின் தாய்) இறைபதம் அடைந்துள்ளார்.
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

(1818)

## 4 ஆம் ஆண்டு நினைவுதினம்



மலர்வு
21 - 11 - 1957

உதிர்வு
02 - 01 - 2022

### அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்

திதி : மார்கழி மாத அமாவாசை

நான்கு ஆண்டுகள் கழிந்ததப்பா
நாள்தோறும் உங்கள் நினைவுகளுடன்
நாங்கள் இங்கே வாழுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் மறையாதப்பா!


அப்பா எங்கள் ஆருயிர்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6371)

பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1948.10.30

மறைவு
2024.12.31

செம்பியன்பற்று தெற்கு, செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும்.
உபயகதிர்காமம், புலோலி தெற்கு புலோலியை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் சின்னையா சுப்பிரமணியம்

அமாவாசை திதி வளர்பிறை - 19.12.2025

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ – வேரோடி
விழுது விட்டபெரு விருட்சமே எமை – பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ
ஓராண்டுகள் ஆனபோதிலும்
உங்கள் உயிர்மூச்சு மறைவதில்லை.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு,
புலோலி.

(1819)

தகவல்–
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதே சபை, வேலணை
# தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2026

1. வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2025.12.19 - 2026.01.01**
**(மு.ப 9.00 முதல் பி.ப 15.00 மணிவரை)**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2026.01.02**
**பி.ப 14.00 மணி வரை**
**கேள்வி திறக்கும் திகதி : 2026.01.02 பி.ப 14.00 மணி**
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக்கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசித் தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ் விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக்கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வேலணை பிரதேச சபை, வேலணையில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 2000.00 இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 5000.00 இனையும் பணம் செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு, வேலணை பிரதேச சபை"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப் பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் (பதிவுத் தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
8. கேள்விகோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விகோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள் / கேள்விதாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வேலணை பிரதேச சபை பெறுகைக் குழுவால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதாகும்.
10. மேலதிக விவரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை (இரவு) | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|
| NP/14/41(18)/1/Out Source/W/01/2026 | பாதுகாப்பு சேவை | 01 | 2026.01.05-2026.12.31 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு, வேலணை பிரதேச சபை.**
**தொலைபேசி இல: 021 221 0180**
(C-4610)
**19.12.2025**



# திருவாதவூரடிகள் புராணம் ஓதுவோம் வாரீர்

**ஒருவாசகமும் அறியா என்னை**
**திருவாசகம் எனும் தேனுள் அமிழ்த்தி**
**குருவாசகத்தில் உயர்ந்திடச் செய்யும்**
**மணிவாசகரின் மலரடி போற்றி**

திருவாதவூரடிகள் புராணம் தொடர்ந்து 51 நாட்கள் ஓதும் பயணத்தில் கலந்து கொண்டு, நிகழும் இடங்கள் தொடர்பில் 077 226 2572 இலக்கத்திற்கு அழைத்து அறிந்து கொள்ளுங்கள். அல்லும் பகலும் மார்கழி பூராகவும் ஓதுவோம்.

உலகத்திலேயே காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் கூத்தன் அருளாலும் ஈழத்துச் சித்தர்- சிவத்திரு சிவயோகர் சுவாமியினதும் வைத்தீஸ்வரக்குருக்களினதும், பண்டிதர் பொண்ணம்பலம், சிவ ஆண்டி முனிவர், சிவ அம்பலவி முருகர் எனும் இருவரது வழிகாட்டலிலும் காரைநகர் மக்களின் குலதெய்வம், சிவபூமி மக்களது பாரம்பரிய தெய்வமாகிய பூரண பூட்கறை ஐயனார் ஆலய கும்பாபிஷேகம் எல்லோரது பிரார்த்தனையினாலும், திருவாதவூரடிகள் புராணம் ஓதியும் நாம் மனத்தால் திருவாசகம் ஓதியும் காண்போம். தரிசிப்போம் நம் முன்னோரது ஆசிர்வாதமும் பெற்று பிறவியின் பயனாக ஆசிர்வாதமும் பெற்று பிறவியின் பயனாக சிவானுபவத்தின் முடிந்த நிலை சிவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தையும் பெறுவோம்.



**க.கு.க.சிவபாலன் (K.K.K),**
**சிவநெறிப்புலவர்,**
**பாஞ்சசண்யம்.**



# இன்று திருவாசகம் முற்றோத வாரீர்
# அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயம் 19.12.2025

தன்னை மறந்து தற்போதம் இல்லாமல் ஒரு செயலைச் செய்தால் அது உள் நின்று தூண்டும் இறையருளால் செய்யப் பெற்ற திருவாசகத்தைத் தினம் ஓதுவோம்.

**ஆமாறு உன் திருவடிக்கே அகம் குழையேன் அன்புருகேன்**
**பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்**
**கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்**
**சாமேறே விரைகின்றேன் சதுராலே சார்வானே**

திருவாசகம்-திருச்சதகம்-14

நாம் மனத்தால் குழைந்தும் அன்பு (அன்பே-சிவம்) பெருக்கெடுத்தோடும் உருகுதல் பூமாலை புனையேன், ஆலயத்தொண்டு, கூத்தாடுதல் முதலிய காயமாகிய தொழிலாகும். ஓதுதலும் (திருவாசக முற்றோதல்) இறை புகழும் வாக்கின் தொழிலாகும். மேற்படி ஆலயத்தில் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் இறைவனிடத்திலே ஈடுபட வேண்டும். இந்தச் செயலை விட்டு நீக்கி எனது சிறிய அறிவால் உன்னை அடைந்து விடலாம் என நான் முயல்கின்றேன். இந்த முயற்சி நான் விரைந்து சாவதற்குரியதே ஒழிய, உன்னை அடைவதற்குரிய வழியில்லை என்கிறார்.

மேலும் 90 ஆவது பாடல் திருச்சதகம்

**யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே**
**தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்**
**மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே**

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்' புராணத்தில் அழுது அடைந்தவர் என மணிவாசகரை அன்புடன் சுட்டுகிறார். அழுகை பலவகை உண்டு. ஆனால் இந்த நமது கரும காரணங்களை பூராக இறைவனிடம் அர்ப்பணமாக்கி உள்ளம் ஒருகி அழும் அழுகை தான். இறைவனை நோக்கி வரும் ஆனந்தக் கண்ணீர்! ஆகி உள்ளம் உருகி இறையருளைப் பெறலாம்.

ஆகையால் நாம் திருவாசக முற்றோதலிலும், நாளும் திருவாசகம் ஓதுவோர் நினைந்து உணர்வில் சிறந்து அழுவோம். ஆலயத்தில் பிறவார்த்தை பேசாதும், நம்மை அலங்கரித்தும், தலை விரி கோலத்தை நீக்கியும் இறைவனை பூமலர்களால் அலங்கரித்தும் பாமாலையால் அலங்கரித்தும் இறைவனை **நினைத்து அழுவதற்குரிய ஞானப்பாடல்கள் திருவாசகம்** அழுகின்ற கண்களில் தான் கடவுள் தன்மை பூரணமாக பரிணமிக்கிறதும் என்பததையும் திருவாசகம் நமக்கு உணரத்தந்த மாணிக்கவாசகருக்கு இறைவன் குருநாதனாக வந்து உணர்த்தியிருக்கிறான்.

**சிவமே குருவாய் அருளும் வடிவம்**
**புவிமேல் இதுபோல் அறிததற்கரிதாம்**
**திருவின் உருவாய் எமையாள வந்த**
**மணிவாசகரின் மலரடி போற்றி**

இந்த அரும்பதிப்பை பத்திரப்படுத்தி உங்களது அடுத்த தலைமுறையும் அறியச் செய்து சிவப்பேறு பெறுவோம்



**க.கு.க.சிவபாலன் (K.K.K),**
**சிவநெறிப்புலவர்,**
**பாஞ்சசண்யம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பிரதேச சபை பாதீடு 20 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு 20 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

28 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்.வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் சபை அமர்வு, சபைத் தவிசாளர் கந்தையா யெசீதன் தலைமையில், நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது.

இதன்போது, 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுப் பிரேரணையை தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

குறித்த வரவு-செலவுத் திட்டத்திற்கு சபையின் ஆளும் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 8 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 4 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு உறுப்பினரும் என மொத்தமாக 20 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

இந் நிலையில், தேசிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களும் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர்.

அத்தோடு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் 2 உறுப்பினர்கள் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில் யாழ். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டுள்ளது. (8-33)

# மோட்டார் சைக்கிள்களுடன் பயணித்த கனரக வாகனம் விபத்து



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று நேற்றைய தினம் அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

யாழ்.நகரில் இருந்து பருத்தித்துறைக்கு மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனமொன்று சிறுப்பிட்டி பகுதியில் வீதியோரம் இருந்த தொலைத் தொடர்பு இணைப்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி அருகிலுள்ள காணிக் குள் பாய்ந்துள்ளது.

விபத்தின் போது வாகனம் மற்றும் தொலைத் தொடர்பு இணைப்புக் கம்பம் பலத்த சேதங்களுக்குள்ளான போதும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஏற்பட்டதா அல்லது சாரதியின் நித்திரை தூக்கத்தால் ஏற்பட்டதா என்ற கோணத்தில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-33)

# காரைநகர் பிரதேசசபை பாதீடு 6 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(அராலி)

காரைநகர் பிரதேசசபையின் பாதீடு 6 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான பாதீடு நேற்றையதினம் தவிசாளர் கோவிந்தராஜனால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந் நிலையில் பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குப் பின் பாதீடானது பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது பாதீட்டுக்கு ஆதரவாக சுயேட்சை குழுவின் 2 உறுப்பினர்களும் தமிழ் மக்கள் கூட்டணியின் 2 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி 2 உறுப்பினர்களும் இலங்கை தமிழரசுக் கட்சியின் 1 உறுப்பினருமாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் என எட்டுப்பேர் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்கள் பாதீட்டை எதிர்த்து வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-104)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 23.12.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு 47 டிப்பர் மணல், 3 டிப்பர் மண் மற்றும் உழவியந்திர கலப்பைகள், வாகன இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், எரிவாயு சிலிண்டர்கள், எரிவாயு அடுப்பு என்பவற்றின் ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலை நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இளங்கலைஞர் மன்றத் தலைவர் கவிஞர். த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வாழ்த்துரை வழங்கவுள்ளார்.

இந் நிகழ்வில் இசையரங்கு, இசைநாடக அரங்கு என்பன இடம்பெறவுள்ளன. (8)

# சுப்பர்மடம் கடற்கரையில் கரையொதுங்கியது கஞ்சாமூடை



(கரணவாய்)

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் ஒரு மூடை கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் மூடை ஒன்று காணப்படுவதாக நேற்று வியாழக்கிழமை காலை பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் கடல் நீரில் நனைந்த நிலையில் இருந்த மேற்படி கஞ்சா மூடையை மீட்டுள்ளனர். (8-60)

## சந்தைகளில் நேற்றைய விலை



பொருளாதார மத்திய நிலையம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 1000 | 800 | 800 | 700-800 | 600 | 800-1100 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 250 | -- | 250 | -- |
| பச்சைமிளகாய் | 1600 | 1300 | 1200 | 1300 | 1200 | 1100 | 1200-1600 |
| தக்காளி | 600 | 600 | 600 | 800 | 600 | 440 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 150 | 180 | 80 | 130-150 |
| கோவா | 350 | 250 | 300 | 400 | 300 | 300 | 250 |
| கரட் | 400 | 330 | 300 | 400 | 320 | 250 | 350 |
| பூசணி | 140 | 120 | 100 | 120 | 100 | 60 | 120 |
| புடோல் | 350 | 500 | 300 | 500 | 300 | 350 | 360 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 200 | 80 | 100 | 50-80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-250 | 300 | 400 | -- | 350 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 250 | 300 | 240 | 230 | — |
| பாகற்காய் | 1800 | 1600 | 1500 | 2000 | 1200 | 800 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 300 | 300 | 600 | 300 | 300 | 250-300 |
| கருணைக்கிழங்கு | 350 | 250 | 300 | 400 | -- | 300 | 250 |
| பயற்றங்காய் | 800 | 650 | 600 | 1000 | 600 | 700 | 700 |
| லீக்ஸ் | 400 | 350 | 250 | 400 | 320 | 250 | 350 |
| பீற்றூட் | 400 | 500 | 500 | 600 | 400 | 270 | 400 |
| கறிமிளகாய் | 1200 | 1300 | 1200 | 1600 | 1200 | -- | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- | -- |
| போஞ்சி | 700 | 600 | 1000 | 800 | 600 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 800 | 650 | 500 | 800 | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 180 | 100-120 | 200 | 250 | -- | -- | 170 |
| தேசிக்காய் | 600 | 1000 | 400 | 400 | 300 | 280 | 300-850 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 120-160 | -- | 120 | 50-150 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 500 | -- | 470 | 480 |
| வெங்காயப்பூ | 600 | 900 | 600 | 800 | -- | -- | 1100 |
| முள்ளங்கி | 300 | 300 | 200 | 400 | 300 | 180 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 130 | 200 | 80 | -- | 80 | -- |
| வல்லாரை | 80 | 70 | 100 | 150 | -- | 100 | -- |
| ஈரப்பலா | 100 | 100-150 | 100 | 200 | -- | 50 | 50-80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியா -தென்னாபிரிக்கா இடையேயான ரி-20 போட்டி

# கடுமையான பனிமூட்டத்தால் ரத்து!

## இந்திய கிரிக்கெட் வாரியம் மீது அதிருப்தி




இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் இடையே லக்னோவில் நடைபெற இருந்த 4 ஆவது ரி-20 போட்டி கடும்பனிமூட்டம் காரணமாக ரத்து செய்யப்பட்டது.

ஆடுகளத்தை நடுவர்கள் 6 முறை ஆய்வு செய்த பிறகே போட்டியை நடத்த முடியாத சூழ் நிலை ஏற்பட்டதால் கைவிட்டனர். நேற்று முன்தினம் 7 மணிக்கு இந்த போட்டி தொடங்கவேண்டும். ஆனால் இரவு 9.25 மணி வரை நடுவர்கள் ஆட்டத்தை நடத்த முடியுமா? என்று ஆய்வு செய்த னர்.

கடும் பனியால் போட்டியை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை இல்லை என்பதால் அவர்கள் போட்டியை ரத்து செய்தனர்.

போட்டி கைவிடப்பட்டதால் நீண்ட நேரமாகக் காத்திருந்த ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர். இது தொடர்பாக கிரிக்கெட் வாரியம் மீது கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட் டுள்ளது.

வட மாநிலங்களில் இந்த நேரத்தில் பனி இருக்கும் என்பதால் போட்டி அட்டவணையை அங்கு அமைத்தது தவறு என்று விமர் சிக்கப்பட்டுள்ளது.

காற்றின் தரக் குறியீடு மோசமாக இருந்து வரும் வட மாநிலங்களில் போட்டியை நடத்தியது தவறு என்று ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் விமர்சித்து வருகிறார்கள். இது வெட்கப்பட வேண்டிய விடயம் என்று அவர்கள் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். ( நி)

### உலகக்கிண்ண கால்பந்தாட்டம் ரிக்கெட்டின் விலை நிர்ணயம்


விலை நிர்ணயம் குறித்த கால்பந்து ரசிகர்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து. அடுத்த ஆண்டு உலகக் கிண்ணத்தில் 104 போட்டிகளுக்கும் மிகவும் மலிவு விலையிலான டிக்கெட்டுகளை ஃபிஃபா அறிவித்துள்ளது.

அதன்படி. ஃபிஃபா கடந்த செவ்வாய்க்கிழமை ஒவ்வொரு போட்டிக்கும் சம்பந்தப்பட்ட அணிகளின் ரசிகர்களுக்காக பிரத்தியேகமாக ஒரு புதிய வரிசை டிக்கெட்டுகளை உரு வாக்கியுள்ளதாக அறிவித்தது.

இதற்கு அமைவாக, இறுதிப் போட்டி உட்பட சீசனின் ஒவ்வொரு போட்டிக்குமான டிக்கெட் விலை அதிகபட்சமாக 60 அமெரிக்க டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (நி)

### யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அன்னையின்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1953.05.07

மறைவு 15.12.2025

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் நிர்வாக உறுப்பினருமாகிய

**திரு. திருநாவுக்கரசு இராஜேந்திரன்**

அவர்கள் 15.12.2025 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைகின்றோம்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4596)

மீளாத் துயரில் ஆழும்-

யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை சமூகம்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 - 03 - 1937

இறப்பு 17 - 12 - 2025

## திருமதி.அன்னமணி பொன்ராசா

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னமணி பொன்ராசா அவர்கள் 17.12.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற ஆபிரகாம் நட்சத்திரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ் சென்ற மோசஸ் ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலம் சென்ற மோசஸ் பொன்ராசாவின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான பிரகாசியம்மா, செல்லம்மா, ஞானம்மா, சாமிநாதன், தானியல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புனித சகாயராணி, புனித அமலராணி, அன்ரன் அலெக்ஸ்சாண்டர் (ராஜன்), அல்பேட் ஆனந்தராசா, புனித அற்புதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராசா,லெற்றிசியா தயாளினி, சாந்தராணி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

கரன்ஸ்ரன், கரோலினா, ஜனஸ்ரன், ஜனுசியா, மதுசியா, லான்சியா, டெனோசியன், கர்மிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.12.2025 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வயாவிளான் சேமக்காலையில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:குடும்பத்தினர்
076 3803 773

(6315)

# மரண அறிவித்தல்



## திரு.விசுவநாதர் இராசரத்தினம்

மாதகல் காஞ்சிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.விசுவ நாதர் இராசரத்தினம் அவர்கள் 17.12.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான விசுவநாதர்- செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும்,சற்குணதேவி அவர்களின் அன்புக் கணவரும், வினிதினி(சுவிஸ்),சஞ்சீவன் (Factory Manager, Northsea Limited), ஜெகதீஸ்வரன் (கனடா), விஜிதரன் (ஜெர்மனி), கவிதா (சட்டத் தரணி,மல்லாகம் நீதிமன்றம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான சிதம்பரம், மகேஸ்வரி மற்றும் சிற்றம்பலம், சுப்ரமணியம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ் வரி, பத்மநாதன், காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் புவனேஸ்வரி, சாந்தகுமாரி, சிவாஜி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணா மூர்த்தி(சுவிஸ்), அபிசுஜா(அபிவிருத்தி உத்தி யோகத்தர், யாழ்.மாவட்ட செயலகம்), குகசத்தியா(கனடா), ஜனனி(ஜெர்மனி), தனோஜன்(Assistant Manager, NTB Bank, Kandy) ஆகியோரின் அன்பு மாமனாரும்,கதீசன், கபிஷா, அபினா, தாரணி, ஷஸ்விகா, அஸ்மிகா, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.12.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பின்னர் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாதகல் இந்து போதி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(6305)

...ம், மாதகல்.

தகவல் - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## தவறான பாதையில் ரஷ்யா தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை



(தாலின்)

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா தவறான பாதையில் செல்வதை இந்தியா எடுத்துச் சொல்ல வேண்டும் எஸ்தோனியா கோரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையிலான போர் 3 ஆண்டுகளைக் கடந்தும் நீடிக்கும். இரு நாடுகளும் பரஸ்பரமாக தாக்குதல் நடத்தி வருகின்றன. உக்ரைன் நிலப்பரப்பை கைப்பற்றுவதில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பிடிவாதமாக இருந்து வருகிறார். இரு நாடுகளுக்கு இடையேயான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ஏதும் கைகொடுக்கவில்லை.

இந்த நிலையில், உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்துவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க முடியும் என்று ஐரோப்பிய நாடான எஸ்தோனியா வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கஸ் சாக்னா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: நீண்டகாலமாக சுறுசுறுப்பான பொருளாதார உறவுகளைக் கொண்ட ஒரு பெரிய நாடு இந்தியா.

இந்தியா ரஷ்யாவின் மீது சில அழுத்தங்களை கொடுக்கலாம். உக்ரைன் மற்றும் ஐரோப்பியாவுக்கு எதிராகவும், ஐ.நா அரசியல் சாசனங்களுக்கு எதிராகவும் ரஷ்யா செயற்பட்டு வருகிறது. இதனை பிரதமர் மோடி மற்றும் இந்திய மக்கள் உலகெங்கும் எடுத்துச் சொல்ல முடியும்.

ரஷ்யா தவறான பாதையில் செல்வதை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புகள் இந்தியாவிடம் அதிகம் உள்ளது. உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்துவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க முடியும், இவ்வாறு அவர் கூறினார்.

ரஷ்யா மற்றும் உக்ரைனை போலவே, எஸ்தோனியாவும், சோவியத் யூனியனில் இடம்பெற்றிருந்த 15 நாடுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாடு, ஐரோப்பாவின் பால்டிக் கடல் பிராந்தியத்தில் அமைந்துள்ளது. (நி)

# அமைதிப் பேச தோல்வி அ

## எச்சரிக்கை வி

(மொஸ்கோ) ---

**உக்ரைன் அமைதிப் பேச்சு தோல்வி அடைந்தால், உக்ரைனில் மேலும் கூடுதலான நிலப்பரப்பை ரஷ்யா கைப்பற்றும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

★ ★ ★

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இரு நாடுகளுக்கு இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆனால் தீர்வு இல்லாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது.

எனவே, "நேட்டோ" கூட்டமைப்பில் உக்ரைனை இணைக்க வேண்டும் என்ற தங்கள் நீண்டகால கோரிக்கையை கைவிடத் தயாராக இருப்பதாக, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியிருந்தார்.

இந்தச் சூழலில், வருடாந்திர கூட்டத்தில் இராணுவத் தளபதிகள் மத்தியில் புடி பேசியதாவது:

அமைதிப் பேச்சுவார்த்தைக குறித்து ரஷ்யாவின் நிபந்தனைக ஏற்கத் தவறினால், உக்ரைனில் தன பிராந்தியக் கட்டுப்பாட்டை விரிவுபடுத் ரஷ்யா நடவடிக்கை எடுக்கக்கூடு மேலும் கூடுதலான நில்ப்பரப்பை கை பற்றுவோம்.

இராஜதந்திர முயற்சிகள் தடை பட்டால், ரஷ்யா இராணுவப் பலத்

## தீவிரவாத கருத்துக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### அவுஸ்திரேலியா பிரதமர்



(கன்பெரா)

போண்டி கடற்கரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யூத திருவிழாவை குறி வைத்து நடந்த கொடிய துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து, வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிராக தனது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தெரிவித்தார்.

சிட்னியின் போண்டி கடற்கரையில் நடந்த ஹனுக்கா நிகழ்வில் இரண்டு துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலின் விளைவாக 15 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் தாக்குதல் தொடர்பில் கான்பெராவில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அல்பானீஸ், வெறுப்பு, பிரிவினை மற்றும் தீவிரவாத கருத்துக்கள் பரப்புபவர்களை புதிய சட்டங்கள் குறிவைக்கும்.


வெறுப்புப் பேச்சை பரப்புபவர்களுக்கான விசாக்களை இரத்து செய்ய அல்லது மறுக்க உள்துறை அமைச்சருக்கு புதிய அதிகாரங்கள் வழங்கப்படும்.

மேலும், ஒவ்வொரு யூத அவுஸ்திரேலியருக்கும் நமது மகத்தான தேசத்திற்கு அவர்கள் செய்யும் பங்களிப்புக்காக பாதுகாப்பாகவும், மதிப்புமிக்கதாகவும், மதிக்கப்படுவதாகவும் உணர உரிமை உண்டு என்றும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ச்சுவார்த்தை ...டைந்தால்...!

## ...ருக்கும் ரஷ்யா



நம்பத் தயாராக உள்ளது. பேச்சுவார்த்தைகள் மூலம் மோதலை தீர்ப் பதை ரஷ்யா விரும்புகி றது. இராஜதந்திரம் வாயி லாகப் போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்யா பாடுபடும் எனப் புடின் தெரிவித்தார். (நி)

...ம புடின் ...தைகள் ...ாகளை ... தனது ...படுத்த ...கூடும். ...ப கைப் ...நடைப் ...லத்தை

# பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்குப் பரவுமா?

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை!



(டில்லி)

ஏவியன் இன்ஃப்ளூவென்சா எனப்படும் பறவைக் காய்ச்சல் பறவைகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவி, எதிர்காலத்தில் உலகளாவிய சுகாதார நெருக்கடியைத் தூண்டக்கூடும் என்று இந்திய விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர்.

ஏவியன் இன்ஃப்ளூவன்சா எனப்படும் ஒரு வகை காய்ச்சல், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் கால் ஊன்றியுள்ளது.

1990களின் பிற்பகுதியில் சீனாவில் தோன்றியதிலிருந்து இது அவ்வப்போது மனிதர்களுக்கும் தொற்று பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

2003 முதல் 2025 ஓகஸ்ட் வரை, உலக சுகாதார நிறுவனம் 25 நாடுகளில் 990 மனித எச்5என்1 பாதிப்புகளைப் பதிவு செய்துள்ளது.

மனிதர்களிடம் காணப்படும் அறிகுறிகள் கடுமையான காய்ச்சலைப் போன்றே இருக்கும். அதிக காய்ச்சல், இருமல், தொண்டைப் புண், தசை வலி மற்றும் சில நேரங்களில் கண் அழற்சி ஆகியவை ஏற்படும்.

சிலருக்கு எந்த அறிகுறிகளும் தெரிவதில்லை.

மனிதர்களுக்கு ஏற்படும் ஆபத்து தற்போது குறைவாகவே உள்ளது. ஆனால் இந்த வைரஸ் எளிதாகப் பரவக்கூடிய வகையில் ஏதேனும் மாற்றமடைகிறதா என்பதை நிபுணர்கள் கண்காணித்து வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் இந்திய ஆராய்ச்சியாளர்கள் இருவர் புதிய ஆய்வினை முன்னெடுத்தனர்.

எச்5என்1 மனிதர்களிடையே பரவினால் அது எப்படியிருக்கும் என்பதையும், ஆரம்பக் கட்டத்திலேயே அதைத் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

மனிதர்களுக்குப் பரவும் அச்சுறுத்தல் உண்மையானது. ஆனால் சிறந்த கண்காணிப்பு மற்றும் விரைவான பொதுச் சுகாதார நடவடிக்கைகள் மூலம் இதைத் தடுக்க முடியும்," என குறிப்பிடப்படுகிறது. (நி)

# இங்கிலாந்து மற்றும் வேல்ஸில்

## 5 நிமிடங்களுக்கு ஒரு வாகனம் திருட்டு

### புதிய ஆய்வில் தகவல்!



(லண்டன்)

2025 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் ஒரு வாகனம் திருடப்படுவதாக புதிய ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

திருடர்களால் அதிகம் குறிவைக்கப்படும் வாகனங்களில் கார்கள் பிரதானமாக உள்ளதாகவும் குறித்த ஆராய்ச்சியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் 80,000இற்கும் மேற்பட்ட வாகனங்கள் திருடப்பட்டதாக கோ-ஆப் இன்சூரன்ஸ் மூலம் பெறப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

இது 2024ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 11 சதவீதம் அதிகமாகும் என்றும் காப்பீட்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் லண்டனின் பெருநகர பொலிஸ் பிரிவில் 24,211 வாகனத் திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதைத் தொடர்ந்து வெஸ்ட் மிட்லாண்ட்ஸில் 13,000இற்கும் மேற்பட்ட வாகன திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை வேல்ஸில் 3,729 வாகனங்கள் திருடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது 2024ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும் போது இந்த பிராந்தியத்தில் திருட்டுகளின் எண்ணிக்கையில் 70 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக் கடைகள், சிற்றுண்டிச்சாலை , நடமாடும்கடைகள், தள்ளுவண்டில்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026 (01.01.2026 - 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 19.12 .2025 - 26.12.2025 (மு.ப 9.00 - பி.ப.2.30 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 27.12.2025 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 27.12.2025 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது 27.12.2025 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கவேண்டும்.
3. சந்தை சுத்திகரிப்பு பணிகளை குத்தகையாளர் தாமே பணியாளர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட தரம் பிரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளையும், திரவக்கழிவுகளையும் அகற்றும் பணி மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக் கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் பார்வையிடமுடியும்
8. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப் பணத்தை 30.12.2025 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

மீள்கேள்வி அறிவித்தல் 2026 – (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 120,101.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,255,500.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 1,285,000.00 |
| 4 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 5 | செங்குந்த கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 141,000.00 |
| 6 | செங்குந்த கோழி இறைச்சிக்கடை | இல04 | 5,000.00 | 663,500.00 |
| 7 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல05 | 5,000.00 | 1,075,000.00 |
| 8 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 626,234.98 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 411,500.00 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 12 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 14 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.00 |
| 15 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 16 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 17 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 630,000.00 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,401.00 |
| 20 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 441,000.00 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 23 | துரையப்பா விளையாட்டரங்கு சிற்றுண்டிச்சாலை, துரையப்பா விளையாட்டரங்கு நடமாடும் கடை இல 01, சுப்பிரமணியம் பூங்கா- நடமாடும்கடை இல 01, இல 02 | | 61,000.00 | 655,000.00 |
| | நடமாடும் வியாபாரம் .- நிபந்தனை. 1. நடமாடும் வியாபார விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து மாநகரசபையில் அனுமதி பெறப்பட வேண்டும். 2. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்யவேண்டும். | | | |
| 24 | தள்ளுவண்டில் இல 01 | | 20,000.00 | 120,000.00 |
| 25 | தள்ளுவண்டில் இல 02 | | 20,000.00 | 120,000.00 |
| 26 | தள்ளுவண்டில் இல 03 | | 20,000.00 | 120,000.00 |
| 27 | தள்ளுவண்டில் இல 04 | | 20,000.00 | 120,000.00 |
| 28 | தள்ளுவண்டில் இல 05 | | 20,000.00 | 120,000.00 |
| 29 | தள்ளுவண்டில் இல 06 | | 20,000.00 | 120,000.00 |
| 30 | தள்ளுவண்டில் இல 07 | | 20,000.00 | 120,000.00 |

முதல்வர் ,யாழ் மாநகர சபை,யாழ்ப்பாணம். (C-4609)

# 397 யானைகள் இதுவரை உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் 2025 ஆம் ஆண்டில் இதுவரை 397 காட்டுயானைகள் உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளது.

மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதல்களே இந்த உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

உயிரிழந்த யானைகளில் 71 யானைகள் துப்பாக்கிச் சூட்டினாலும், 56 யானைகள் மின்சாரம் தாக்கியும், 46 யானைகள் தொடருந்து விபத்துக்களினாலும் உயிரிழந்துள்ளன.

அத்துடன், "அக்க பட்டாஸ்" எனப்படும் தாடை வெடிபொருட்களால் 20 யானைகள் உயிரிழந்துள்ளதோடு, நஞ்சூட்டப்படல், நீரில் மூழ்குதல் மற்றும் கைவிடப்பட்ட கிணறுகளில் வீழ்தல் போன்றவற்றாலும் ஏனைய மரணங்கள் சம்பவித்துள்ளன.

பிராந்திய ரீதியாகப் பார்க்கும்போது, கிழக்கு வனஜீவராசி பிராந்தியத்தில் அதிகபட்சமாக 82 யானை மரணங்கள் பதிவாகியுள்ளன.

அனுராதபுரத்தில் 77 மரணங்களும், பொலநறுவையில் 69 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இலங்கையின் யானை சனத்தொகையைப் பாதுகாப்பதற்கும், இத்தகைய மோதல்களைக் குறைப்பதற்கும் முறையான வியூகங்களை வகுக்க வேண்டியது அவசரத் தேவை என வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

வாழ்விட இழப்பு மற்றும் உணவு தேடி யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கான நீண்ட காலத் திட்டங்களின் அவசியத்தையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர் மீது துப்பாக்கிச் சூடு

(தருமபுரம்)

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியிலிருந்து, அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர், பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்றதால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸாரின் சமிக்ஞையை மீறி, உள்ளக வீதியூடாக தப்பிச்செல்ல முற்பட்டவேளை, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான டிப்பர் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

# பண்பாட்டுப் பேணல்

பண் பெனப் படுவது பாடறிந்தொழுதலாகும். பண்பு ஒரு குண நலனாகும். பாடு என்னும் தொழிற் பெயர் விகுதி இணைந்தே "பண்பாடு" என்னும் சொல்லாக வழங்கப்படுகிறது. பண்படுத்தல் என்பது பொதுவாக நிலத்தைப் பயிர்ச் செய்கைக்கு உரியதாக ஆக்குதல் எனப் பொருள் தரும்.

அது போலவே உள்ளத்தைப் பண்படுத்தவே பண்பாட்டு நிலையாகும் தமிழர் பண்பாடு பற்றிய தேடல் இப்போது பலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பண்பாட்டு நடைமுறைகள் ஓர் இனத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும்.

தமிழர் பண்பாடு உணவு, உடை, வீடு என்னும் மூன்று அடிப்படையான தளங்களிலே கட்டமைக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கான விளக்கச் சான்றுகள் பண்டைத் தமிழிலக்கியங்களிலே விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனிதவாழ்வியலில் உணவு, உடை, வீடு என்னும் மூன்றும் இன்றியமையாதவை. சிறப்பான முறையிலே அவை நடைமுறைகளாக இன்றும் செயற்பாட்டில் உள்ளன.

தமிழர் பண்பாட்டில் உணவு, உடல் நலத்திற்காக மட்டுமன்றி பருவகாலங்களின் விளைபொருட்களையும் இணைத்தே திட்டமிடப்பட்டுள்ளது. விளைபொருட்களின் பண்பாட்டு நிலையான பெயர்கள் சிறப்பானவை. எடுத்துக்காட்டாக, முக்கனி, அறுசுவை என்பவற்றைக் கூறலாம். முக்கனிகளில் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பன அடங்கும். இவை மனிதனுடைய உணவுப் பொருளாக மட்டுமன்றி வழிபாட்டில் மடைப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

சுவைகளிலே ஆறு வகைகள் உண்டு. அவை கசப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பனவாகும். உணவு சமைக்கப்படும் போது இச்சுவைகள் கருத்திற் கொள்ளப்படும். உணவு தொடர்பான பழமொழிகளும் பண்பாட்டைப் பதிவு செய்து வைத்துள்ளன.

உடை: தமிழர் பண்பாட்டில் இரு நிலைகளில் சிறப்பாக அணியப்படும். ஒன்று, காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ற ஆடை அணிதல். மற்றையது, உடல் வளர்ச்சிக்கேற்ற உடைகளை உடுத்தல். இது குறிப்பாக பெண்களின் உடல்வளர்ச்சி நிலையில் சிற்றாடை, மாற்றாடை, சீலை போன்ற ஆடை மாற்றங்கள் பேணப்பட்டன. பூப்படைந்த பின்னர் பெண் மாற்றாடை அணிய வேண்டும் என்ற பண்பாடு பேணப்பட்டது.

நீராடும் போது அணியும் ஆடை ஒற்றாடை எனப் பட்டது. "ஆள்பாதி ஆடை பாதி" என்னும் பழமொழியும் பண்பாட்டு நிலையில் ஆடை பெற்றிருந்த சிறப்பை உணர்த்துகிறது. இன்றும் பண்பாட்டு ஆடை அணியும் மரபு பேணப்படுகிறது.

வீடு தொடர்பாகத் தமிழருடைய பண்பாடு சிறப்பாகப் பேணப்பட்டதற்கும் சான்றுகள் உள. தமிழில் இல்லம், மனை என இரு சொற்களே பயன்படுத்தப்பட்டன. இல்லம் என்பது குடும்பத்தவர் கூடிவாழும் இடமாகும் .

"மனை" என்பது நிலம் என்ற பொருள்தருவது, இவ்விரு இடத்திலும் பெண்ணே பெரும்பாலும் செயற்பட்டாள். அதனால் இல்லாள், மனைவி என்ற இரு சிறப்பான நிலைகள் பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்தன. இச் சொற்கள் இரண்டிற்கும் எதிர்ப்பால் ஆண்பாற் சொற்கள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இல்லாள் என்பது இல்லத்தை நிர்வாகம் செய்பவள் எனப் பொருள் தருவது. மனைவி என்பது மனைக்குத் தலைவி என்று பொருள் தரும்.

தமிழர் பண்பாட்டில் இசையும், ஆடலும் சிறப்பிடம் பெறுபவை. ஓவியம், சிற்பம், கட்டடம் போன்ற கலைகளும் பெருவளர்ச்சி பெற்றிருந்தன. இவை பற்றிய பதிவுகளும் நிறைய உள்ளன. தமிழரின் மரபான பண்பாட்டு நடைமுறைகளை விழாக்களும் கொண்டாட்டங்களும் செயற்படுத்தி வருகின்றன. எனவே அவற்றைத் தொடர்ந்து செயற்படுத்துவதன் மூலம் பண்பாட்டுப் பேணலை மேற்கொள்ளலாம்.

இன்று பிற பண்பாட்டு நடை முறைகளின் செல்வாக்கான தமிழர் பண்பாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு களைய வேண்டி உள்ளது. அதற்காகப் பண்டைய தமிழர் பண்பாட்டையும் தேடியறிய வேண்டியுள்ளது. இது இன்றைய இளைய தலைமுறையினருடைய பணியாக உள்ளது. வையகமெங்கும் பரந்து வாழும் தமிழர் தமது முன்னோர்களின் வாழ்வியல் முறைகளை அறியவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் இப்பணியை எல்லோரும் இணைந்து செய்ய வேண்டும். இன்னும் பண்பாட்டுப் பேணலுக்கு ஓர் ஆவணக் காப்பகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அங்கு தமிழர் பண்பாடு தொடர்பான ஆவணங்கள், அடையாளங்கள் யாவும் முறையாக வைத்துப் பேணப்பட வேண்டும்.

வெள்ளி நற்சிந்தனை 17



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

19.12.2025
மார்கழி 04, வெள்ளிக்கிழமை
அமாவாசை முழுவதும்

கேட்டை முன்னிரவு 11.50 மணிவரை
சுப நேரம் 6.23-7.53 மணிவரை
இராகுகாலம் 10.53-12.23 மணிவரை
ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்**: வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**கடகம்**: பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும்.

**துலாம்**: புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்**: பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**ரிஷபம்**: நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்**: மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்**: குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்**: நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்**: கனவுப் பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**: செல்வ நிலை உயரும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு**: பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மீனம்**: இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும், பயணங்கள் கைகூடும்.

நேர்மைக்கு பலன் கிடைக்கும் ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சினால் மன்னார் மாவட்டத்தில் பிரதேச செயலாளர்களின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ மற்றும் வருமானம் குறைந்த நிலையில் உள்ள பெண்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட 51 பயனாளர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வானது மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.




யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளியைச் சந்தித்து வடக்கு மாகாண சபைத் தேர்தல் மற்றும் கடற்றொழிலாளர்களின் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் வலிமேற்கு பிரதேசசபை உறுப்பினர் வி.கேசிகனும் பங்கேற்றிருந்தார்.





Beefort International school இன் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. காலை,மாலை என இருஅமர்வுகளாக இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கே.சுரேஷ்பிரேமச் சந்திரன், எம். ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இவர்களை Beefort இன் நிர்வாகப் பணிப்பாளர் ம.பகீரதன் வரவேற்பதனை படத்தில் காணலாம்.



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியினரால் நேற்றைய தினம் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. (படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையால் சுத்திகரிக்கப்பட்ட மனசாட்சியே, அனைத்திலும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷமாகும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வேடதாரிகள் காவு கொண்ட தமிழ் மக்கள் பேரவை

தமிழ் மக்கள் பேரவை விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னர் தமிழ் மக்களால் அதிகம் உச்சரிக்கப்பட்ட பெயர்.

தமிழ் அரசியல் தரப்புகளை ஒற்றுமைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமையை வலிமைப்படுத்துவதற்காக உருவாகிய ஒரு பெரும் மக்கள் அமைப்பு அது.

ஆம், தமிழ் மக்கள் பேரவை மீது நம் மக்கள் கொண்ட நம்பிக்கைக்குச் சான்று அந்த அமைப்பு முன்னெடுத்த **எழுக தமிழ்** எழுச்சிப் பேரணியில் பங்கேற்ற மக்கள் தொகையாகும்.

உண்மை. மிகக் குறுகிய காலத்தில் தமிழ் மக்களிடம் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்திய தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு இன்று பத்து ஆண்டுகள் நிறைவாகின.

இப்போது போல இருக்கிறது அந்த நிகழ்வின் நினைவுகள். 19.12.2015 அன்று மாலைப் பொழுது. யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் கீழ்த்தள கேட்போர் கூடத்தில் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமையோடு பிரசன்னமாகியிருந்தன.

இதையும் கடந்து தமிழர் தாயகத்தின் வடக்கு கிழக்கு மாகாண பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் கூடியிருக்க, இந்து – கத்தோலிக்க மதகுருமார்கள் முன்னிலை வகிக்க தமிழ் மக்கள் பேரவை உற்பவமாகியது.

ஒரு நல்ல ஆரம்பம் ஐம்பது வீத நிறைவு என்பதுபோல தமிழ் மக்கள் பேரவையின் முகிழ்ப்பு நன்றே அமைந்தது.

என்செய்வது ஊழ்வினை வந்துறுத்தும் என்ற சிலப்பதிகாரத் தத்துவம் நம் இனத்தின் வழி, தமிழ் மக்கள் பேரவைக்கும் பொருந்தவே செய்தது.

ஆம், விடுதலைப் போராட்டத்துக்குப் பின்னரான எம் தமிழ் இனத்தின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகவும் துரதிர்ஷ்டமானதாகவும் இருந்தது.

வடக்கு மாகாண சபை திட்டமிட்டுக் குழப்பப்பட்டது. கடிதப் பரிமாற்றங்கள், முதலமைச்சருக்கு எதிரான கோசங்கள், பித்தலாட்டங்கள் என்பன வடக்கு மாகாண சபையை அர்த்தமற்றதாக்கிக் கொண்டிருந்தன.

அதேநேரம் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு; எங்கள் இனத்துக்கு ஏற்பட்ட இழப்புகள், தமிழின அழிப்பு நடவடிக்கைகள், போர்க்குற்றங்கள், அவற்றின் சான்றுகள், இறுதி யுத்தத்தின் போது எம் மக்கள் முள்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு வதைக்கப்பட்ட உண்மைகள் என அனைத்தையும் நாமே வெட்டிப் புதைத்தோம்.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் தமிழர்களின் இழப்பே அவர்களின் பலம் எனச் சர்வதேசம் கருதியிருந்த அந்த அருமந்த சூழ்நிலையை, நம்மவர்களைக் கொண்டு பேரினவாதம் தகர்த்துவிட்ட அந்தப் பேரவலம் உணரப்பட்டபோது; மக்கள் இயக்கம் தேவை என்ற தூயசிந்தனையால் உற்பவம் பெற்ற தமிழ் மக்கள் பேரவை, தமிழ்ப்பற்று என உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற போலிகளால் வேரறுக்கப்பட்டது என்ற உண்மையை அதன் 10 ஆண்டு நிறைவில் கூறிவைப்பது அவசியமாகிறது.

ஏனெனில் இன்னமும் நம் மத்தியில் தமிழ்ப் போலிகள் வலிமையாக இருக்கின்றன என்பதை எச்சரிக்கை செய்வதற்காக.

### பேரிடர் தொடர்பில் தயார்நிலை இல்லாமை

## பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவை விசாரணை நடத்த நியமிக்குமாறு கோரிக்கை

இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளி அனர்த்தத்தை எதிர்கொள்வதில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் முன்கூட்டிய தயார்நிலை இல்லாமை குறித்து முறையான விசாரணை நடத்த பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட 25 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கூடிய இந்த யோசனைக் கடிதம், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் மிக மோசமான இயற்கை அனர்த்தமாகக் கருதப்படும் டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்து சேதங்கள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் இதுவரை முழுமையாக மதிப்பிடப்படவில்லை என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தினால் ஏற்பட்ட பேரழிவைத் தடுத்திருக்க முடியும் என்றும் அதற்கான போதிய முன்னெச்சரிக்கை மற்றும் தயார்நிலை அரசாங்கத்திடம் இருக்கவில்லை என்றும் எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த அனர்த்தத்தைத் தவிர்ப்பதற்கு ஏன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது குறித்து முழுமையான ஆய்வை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே இந்த விசேட தெரிவுக் குழுவை நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் எதிர்கால பாதுகாப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்தவும் இந்த விசாரணை அவசியம் என அந்தக் கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## வலி. கிழக்குப் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்

### உறுப்பினர்கள் கேக் வெட்டிக் கொண்டாட்டம்

வலி. கிழக்குப் பிரதேச சபையின் பாதீடு நேற்று சபையில் நிறைவேற்றப்பட்ட நிலையில் உறுப்பினர்கள் கேக் வெட்டிக்கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

வலி. கிழக்கு (புத்தூர்) பிரதேச சபையின் பாதீடு தவிசாளர் தியாகராசா நிரோஸினால் சபையில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டதை, தொடர்ந்து பாதீட்டின் மீதான விவாதங்கள் நடைபெற்றது.

அதன் பின்னர் 36 உறுப்பினர்களைக் கொண்ட சபையில், ஒருவர் அண்மையில் உயிரிழந்த நிலையில் மற்றுமொருவர் நேற்று சபைக்கு சமூகமளிக்காதமையால் 34 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருந்தனர்.

அவர்களில் தேசிய மக்கள் சக்தியின் 09 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் ஏனைய 25 உறுப்பினர்களும் ஆதரவு அளித்தனர். (ம-7,33)

## வடக்கில் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய அபிவிருத்தி

### அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் எல்லைப்புறங்கள் மற்றும் காடுகளால் சூழப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்கள் என எவற்றையும் விடுத்துவிடாது அனைத்துப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் முழுமையான திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவுகளை ஆராயும் விசேட கூட்டம், நேற்று வியாழக்கிழமை (18.12.2025) மாலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், அண்மையில் ஏற்பட்ட பேரிடர்நிலையைக் கருத்திற் கொண்டு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளில் மாற்றங்களைச் செய்வதற்கு நிதி ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதைச் சுட்டிக்காட்டினார். அதற்கமைவாக காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை விரைவாக மேற்கொண்டு இறுதிப்படுத்தப்பட்ட திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தினார்.

2025ஆம் ஆண்டு எமது நிதி ஒதுக்கீட்டின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் அவற்றின் விளைவுகளைத் தொகுத்து முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள் எத்தகைய உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை நாம் நிதி ஆணைக்குழுவுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக மாகாணத்தின் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்ததற்கும் அப்பால், எவ்வளவு மேலதிக உற்பத்தியானது மேற்கொள்ளப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

விவசாயத் திட்டங்களின் இறுதி இலக்கானது மக்களின் வாழ்வாதார உயர்வாகவும் மாகாணத்தின் உற்பத்தி அதிகரிப்பாகவும் அமைதல் வேண்டும் என ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார். (ம-7)

## கொழும்பில் கத்திக்குத்து ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை 6ஆம் ஒழுங்கைப் பகுதியில் நேற்று (18) மாலை இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கடையொன்றின் முன்னால் நின்றிருந்த நபரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 53 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வா பேரிடர் எதிரொலி

# டன் கணக்கிலான குப்பைகள் கடலில் கலந்துள்ளன

## கடற்றொழிலுக்கு பாரிய அச்சுறுத்தல்

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து இலங்கையின் 200 கடல் மைல் நீளத்திலான கடற்கரையோரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும் டன் கணக்கிலான தாவரக் கழிவுகள் மற்றும் ஏனைய குப்பைகள் கடலில் கலந்திருப்பதால் இது நாட்டின் கடற்றொழிலுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சமந்த குணசேகர எச்சரித்துள்ளார்.

முன்னைய வெள்ளப்பெருக்குகளின் போது பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளே ஆற்றுப்படுகைகள் ஊடாகக் கடலில் கலந்தன.

ஆனால், இம்முறை பாரியளவிலான தாவரக் கழிவுகள், ஆடைகள், மரக்கட்டைகள், கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் போத்தல்கள், விலங்குகளின் எச்சங்கள் எனப் பல்வேறுபட்ட கழிவுகள் கடலில் கலந்துள்ளதாகத் தெரிவித்தார்.

கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், யாழ்ப்பாணம், புத்தளம், கற்பிட்டி, மன்னார், நெடுந்தீவு மற்றும் கிழக்கு மாகாணம் ஆகிய பகுதிகளின் கடற்கரையோரங்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நக்கிள்ஸ் மற்றும் சிவனொளிபாத மலை போன்ற மத்திய மலைநாட்டின் வனப்பகுதிகளில் இருந்து அடித்து வரப்பட்ட தாவரக் கழிவுகள் கடல்சார் சூழல் தொகுதிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

வெள்ள நீர் வடிந்த பின்னரும் ஆறுகள் மற்றும் குளங்களில் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் கழிவுகளை வீசுவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான கழிவுகள் கடலில் கலப்பதைத் தடுப்பதற்காக ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடங்களில் பாதுகாப்பு வலைகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தலைவர் குணசேகர குறிப்பிட்டார்.

மாசடைந்துள்ள 143 கிலோமீற்றர் நீளத்திலான கடற்கரைப் பகுதியைச் சுத்தப்படுத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக சுமார் 5, 280 மனித நேரங்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் 13 பிராந்திய அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் கூலித் தொழிலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இணைந்து கழிவுகளைச் சேகரித்து அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. (ம-7)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | :- | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் |
| விண்ணப்பதாரரின் பெயர் | :- | இக்னேசியஸ் வெனிபிரீடா |
| ஆதனப்பதிவேட்டின்படி பெயர் | :- | சொந்தக்காரர் |

ஆதன இல - 69 வீதி – விபுலானந்தர் வீதி வட்டாரம் – 01

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01 விபுலானந்தர் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. சூசைப்பிள்ளை கைம்பெண் மேரிமெற்றில்டா என்பவருக்கு 1934ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி 6848 ம் இலக்கத்தில் நொத்தாரிஸ் இ.கந்தையா முகதாவில் பிரிவிடுதல் உறுதிப்படி பர.நில இலா 1 குளி 31/3 ம், 1942 ம் ஆண்டு பங்குனி மாதம் 14ம் திகதி 12144 ம் இலக்கத்தில் நொத்தாரிஸ் இ.கந்தையா முகதாவில் அறுதி உறுதிப்படியும் குளி 8 உம் முதுச வழியாக சொந்தமாகியது. இரு பகுதிகளும் சேர்த்து பர.நில இலா 1 குளி 11 1/3 ஆகும். குறித்த ஆதனத்தில் சொரியலாய் பதினைந்தில் ஆறு பங்கு 1990 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ம் திகதி 5519 ம் இலக்கத்தில் நொத்தாரிஸ் சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் இக்னேசியஸ் வெனிபிரீடா என்பவருக்கு சூசைப்பிள்ளை கைம்பெண் மேரிமெற்றில்டா என்பவரால் அழியா நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதிப்பங்கும் 1990 ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஆண்டனுபவித்து வருவதால் தமக்கே சொந்தமென நொத்தாரிசு சண்முகரத்தினம் முகதாவில் 346/2010.10.15 திகதிய பிரகடன உறுதி மூலம் இக்னேசியஸ் வெனிபிரீடா என்பவர் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.கந்தசாமி அவர்களால் அளந்து வரைந்த 2018/1226 ம் இலக்க 2018.09.30 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு 1 குளி 9.84 ஆக காணப்படுகின்றது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிதென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகலிறை வெள்ளுருவை என்று சொல்லப்படும் "கியாவத்தை" பர.நில இலா 1 குளி 3 1/3 ம் "கியாவத்தை" குளி 8 ஆக இரு பகுதிகளும் சோத்து பர.நில இலா 1 குளி 11 1/3 ம் ஆகும். ஆனால் தற்போது அளந்து கொண்ட அளவின் படியும் நிலப்பரப்பு ஒன்று (1) குளி ஒன்பது தசம் எட்டுநான்கு (9.84) ஆகும்.

### இதன் எல்லைகள்

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | ஒழுங்கை |
| வடக்கு | :- | கையொழுங்கை |
| மேற்கு | :- | செபஸ்தியாம்பிள்ளை கிறீஸ்துராசா |
| தெற்கு | :- | கையொழுங்கை |

இவ்வாதனத்தை இக்னேசியஸ் வெனிபிரீடா என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இக்னேசியஸ் வெனிபிரீடா என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.யெசீதன்
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(C-4612)

## புதிய ...

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்ராலினை தலைமைச் செயலகத்தில் நேற்று (18) கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவையினர் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுகாஸ் கனகரத்தினம், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜா காண்டீபன், தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.

இச்சந்திப்பின்போது தமிழ்த்தேசியப் பேரவையினரால் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து ஏக்கிய ராஜ்ய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தவும் புதிய அரசாங்கம் உருவாக்கவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய சமஷ்டி முறைமை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தமிழக அரசு இந்திய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் பொருளாதார ரீதியாகப் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை அரசாங்கம் இந்தியாவின் பங்களிப்பின்றி வளர்ச்சியடைய முடியாது. தமிழகத்தோடு பொருளாதார ரீதியில் நெருக்கமான உறவையும் தொடர்பாடலையும் உருவாக்காமல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியென்பதும் பாரிய சவாலாகவே இருக்கும்.

இதன் பின்னணியில் இலங்கையின் மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தி, தமிழர்கள் விரும்பும் தீர்வை இந்தியாவினால் சாத்தியமாக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

சந்திப்பின் முடிவில் தமிழ்த்தேசியப் பேரவையின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிய அரசியல் அமைப்புத் தொடர்பாகவும் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சினை தொடர்பாகவும் முதலமைச்சர் மு.க. ஸ்ராலினிடம் தனித்தனியான கோரிக்கைக் கடிதங்களைக் கையளித்தார்.

முதலமைச்சரின் சந்திப்பின் பின்னர் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் விரைவில் சந்திக்கவிருப்பதாகத் தமிழ்த் தேசியப் பேரவையின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல்.திருமாவளவனும் கலந்து கொண்டிருந்தார். (ம-7)

## கணக்காய் ...

தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதே பதவிக்கு முன்னர் ஜனாதிபதி மேற்கொண்ட சிபாரிசுகளையும் மேற்படி பேரவை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அறிவித்தல் ...

எனக் கூறப்படும் கட்டடத்திற்கு எந்த அனுமதியும் பிரதேச சபையில் பெறப்பட்டிருக்காத நிலையில், பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளிற்கேற்ப இக்கட்டடமானது சட்ட விரோதம் என்பதை அறியப்படுத்த மும்மொழிகளிலும் சபையினால் அறிவித்தல் பலகை ஒன்று நாட்டப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பத்மநாதன் சாருஜனால் பிரேரணை ஒன்று சபையில் கொண்டுவரப்பட்டது.

குறித்த பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததையடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தோடு சட்ட விரோத தையிட்டி விகாரையின் விகாராதிபதியின் பதவி உயர்வுக்காக எதிர்ப்பை சபையில் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் எனவும் பத்மநாதன் சாருஜனால் பிரேரணை சபையில் கொண்டு வரப்பட்டது.

குறித்த பிரேரணைக்கும் ஆதரவு தெரிவித்து சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் பிரதேச சபையின் உறுப்பினர்களால் தையிட்டியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கு ...

மற்றும் கிழக்குக்கான புகையிரத சேவைகள் முழுமையாக ஆரம்பிக்கப்படும். 2026 பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் தலைமன்னாருக்கான புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிவாயுவுக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், புதிய விநியோகஸ்தரின் கீழான முதலாவது எரிவாயுக் கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளதால் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது.

இதற்கு முன்னர் எரிவாயு விநியோகம் செய்து வந்த ஓமான் நிறுவனத்திற்குப் பதிலாக சுவிட்சர்லாந்தின் ஜியோகாஸ் ட்ரேடிங் எஸ்.ஏ நிறுவனத்திற்குப் புதிய விநியோக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதற்கான உரிய ஒப்பந்தங்கள் ஏற்கெனவே கையெழுத்திடப்பட்டுள்ளன.

முதலாவது எரிவாயுக் கப்பல் ஜனவரி 5ஆம் திகதி நாட்டை வந்தடையும். எனவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறுவது போல் நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என அமைச்சர் சபையில் உறுதியளித்தார். (ம-7)

## ஆண் சிசு...

பிஸ்ரிலா காபீர் அமல் தம்பதியினரின் எட்டு நாளேயான ஆண் சிசுவே இவ்வாறு மரணமடைந்துள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் கடந்த 10ஆம் திகதி சிசு பிறந்த நிலையில் மல அடைப்பு மற்றும் இரத்தக் கசிவு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை (18) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## யாழில் உள்ளக...

யாகத் தந்து உதவத் தயாராக உள்ளதாக சமூக நலத்துறை முன்னாள் அமைச்சர் கந்தையா வைத்திய நாதனின் பேர்த்தியாரான கௌரி பொன்னையா தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் உள்ளக விளையாட்டு அரங்கத்தை அமைப்பதற்கு முயற்சிகின்றார்கள் எனக் கேள்வியுற்றேன். அதற்காக புராதன மரங்களை அழிக்கவுள்ளதாகவும் கேள்வியுற்றேன்.

இயற்கையை அழிக்காது, புராதன மரங்களை அழிக்காது, உள்ளக விளையாட்டரங்களை சகலரும் பயன்பெறத்தக்க வகையில் மாற்றுவதற்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியும்.

எமது பரம்பரைக்குரிய கோப்பாயில் உள்ள நிலங்களில் ஒன்றை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு வழங்குவதன் ஊடாக அபிவிருத்திக்கு ஒத்துழைக்க நாம் முயற்சிக்கின்றோம். அதற்காக தவிசாளர் தியாகராஜா நிரோஸை சந்தித்து இணக்கத்தினை வெளிப்படுத்தியுள்ளோம்.

இளைஞர்கள் பெருமளவில் வாழக்கூடிய கோப்பாய் பகுதியில் உள்ளக விளையாட்டு அரங்கினை அமைக்க அரசாங்கம் முன்வருமாயின் எமது காணிகளில் ஒன்றை வழங்க பிரதேச சபையுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். (ம-7,33)

## பேரிடர்...

சூரியவினால், பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தம் தொடர்பாக விவாதிப்பதற்கு நேற்றுக் கூடிய பாராளுமன்ற விசேட அமர்வின்போதே பிரதமர் இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

பொதுக் கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பரிசீலனைக்காக குறித்த குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை 2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டு சட்டமூலம், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவினால் சான்றுரைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சமூக பாதுகாப்புக்கான வரித் திருத்தச் சட்டமூலம், சூதாட்ட திருத்தச் சட்டமூலம், மூலோபாய அபிவிருத்தி கொள்கைக்கான திருத்தச்சட்டமூலம் ஆகியவற்றை தாம் சான்றுப்படுத்தியதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கடற்றொழி...

தமிழக - ஈழக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்க என தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில் நேற்று (18) கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

அதன் ஒரு அங்கமாக தமிழக மற்றும் ஈழக் கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாக உரையாடி இருந்தனர்.

நீண்டகால மாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தமிழக மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்சினையை இலங்கை அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி தமிழகத்தையும் ஈழத் தமிழர்களையும் நிரந்தரப் பகையாளிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்றும், இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்திய நலன்களுக்கு முரணான வெளிச் சக்திகள் இலங்கையில் காலூன்றி வருவதனையும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எல்லை தாண்டிய மீன்பிடியைக் கட்டுப்படுத்தி இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணத் தமிழக அரசு தலையிட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை முன்வைத்தார். (ம-7)

## தீக்காயங்களுக்...

தினமும் கூறுவதால் மாணவி மன விரக்தியில் இருந்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதியும் இவ்வாறு தாயார் கூறியதால் குப்பைகளை எரிப்பது போல் பாசாங்கு செய்து பெற்றோலை தன்மீது ஊற்றி தனக்கு தானே தீப்பற்ற வைத்துள்ளார்.

இதன்போது அயல்வீட்டில் உள்ளவர்கள் மாணவியைக் காப்பாற்றிய வேளை குறித்த மாணவி அவர்களுக்கு சம்பவத்தை தெரிவித்துள்ளார்.

பின்னர் தீக்காயங்களுக்குள்ளான அவரை மந்துவில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)


மஹஜன சம்பத — திகதி 2025.12.18 — சீட்டிழுப்பு இலக்கம் 6047 — J 8 0 8 4 4 7
அத சம்பத — J 8 4 4 7 — சீட்டிழுப்பு இலக்கம் 622
சுப தவசக் — திகதி 2025.12.18 — சீட்டிழுப்பு இலக்கம் 163 — விருச்சிகம் 10 25 51
தன நிதானய — திகதி - 2025.12.18 — சீட்டிழுப்பு இலக்கம் - 2077 — S 09 46 62 64 S
மெகா பவர் — திகதி 18/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2395 — B 03 62 76 77 78
ஜய — திகதி 2025.12.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0315 — P 2 6 6 6
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4289 — சீட்டிழுப்பு திகதி 18.12.2025 — V 05 10 14 25 — V
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.18 — சீட்டிழுப்பு இலக்கம் 1356 — துலாம் 03 08 32 55 துலாம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — 18.12.2025 — வெற்றி வாரம் 0755 — N 0 8 1 3 8 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,776,207.20
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3021 — சீட்டிழுப்பு திகதி 2025.12.18 — தினம் வியாழக்கிழமை — 32 43 61 76 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,427,949.60
சனிதா — திகதி 18.12.2025 — வெற்றி வாரம் 5182 — 13 25 62 76 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,884,200.40
சசிரி — வெற்றி வாரம் 851 — சீட்டிழுப்பு திகதி 18.12.2025 — வியாழக்கிழமை — 19 21 39 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4733 — சீட்டிழுப்பு திகதி 18.12.2025 — தினம் வியாழக்கிழமை — 18 20 26 28 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,058,432.40
லக்ன — சீட்டிழுப்பு வாரம் 2197 — 18.12.2025 வியாழக்கிழமை — I 37 01 32 49 53 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.613,903,134.80
அட கோடீபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2847 — சீட்டிழுப்பு திகதி 2025.12.18 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,515,948.00 — 13 51 63 67 N


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்டியில் மீண்டும் நிலச்சரிவு

(கண்டி)

டித்வா புயலினால் ஏற்பட்ட அனர்த்தம் படிப்படியாகச் சீரமைக்கப்பட்டு வரும் நிலையில் மீண்டுமொரு இயற்கை அனர்த்தம் பதிவாகியுள்ளது.

இதன்படி கண்டி, ஹூன்னஸ்கிரிய நகருக்கு அருகில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

3 வீடுகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று (18) காலை இப்பகுதியில் பெய்த மழையுடன் இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நிலவும் ஆபத்து காரணமாக, அருகிலுள்ள இரு தங்குமிடங்களில் இருந்து 90 குடும்பங்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குருநாகல், பதுளை, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இன்று முதல் மீண்டும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


## மாப்பிள்ளை தேவை

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (6324)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு புடவை அனுபவம் உள்ள அல்லது தொழில் பழக ஆர்வமுள்ள ஆண்/ பெண் விற்பனையாளர் தேவை. மதிய உணவுடன் கூடிய சம்பளம்.
நேரில் வரவும். (6322)

சிவகணேஷன் TEX
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்

## Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம்
சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர்
திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி
திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு) (6308)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வைத்தியம்


கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastrtis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால் ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (6323)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை.
தொடர்புகளுக்கு :
076 830 3931 (6303)


# மரண அறிவித்தல்



மலர்வு 07.05.1953 | உதிர்வு 15.12.2025

## Lion திருநாவுக்கரசு இராஜேந்திரன்

(உரிமையாளர்– இராஜேந்திரா வர்த்தக நிலையம் மற்றும் ஸ்ரீரங்கநாதன் ரேடர்ஸ், பஞ்சகர்த்தா, முன்னாள் பொருளாளர், முன்னாள் திருப்பணிச்சபைத் தலைவர், தற்போதைய தலைவர் – கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம், உறுப்பினர் திருநெல்வேலி அரிமாக்கழகம், அகில இலங்கை சமாதான நீதவான்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராஜேந்திரன் அவர்கள் கடந்த (15.12.2025) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.தா.திருநாவுக்கரசு (யாழ்ப்பாணம் - பிரபல வர்த்தகர்) - தனலக்ஷிமி தம்பதியரின் மூத்த மகனும் பூபாலசிங்கம் - ஜீவமணி தம்பதியரின் மருமகனும் சுகந்தினி அவர்களின் அன்புக் கணவரும் கோபிகன் (லண்டன்), றஜீவன், சஜீத்தன், விதுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலேந்திரன், இந்திரஜோதி, ரவீந்திரன், சந்திரவதனி, காலஞ்சென்ற தவேந்திரன் மற்றும் சுகந்தமலர், வசந்தமலர், ஞானேந்திரன் ஆகியோரின் அன்பு அண்ணாவும் தாமிரா (லண்டன்) அவர்களின் அன்பு மாமாவும் பிரஹானாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 343 3924,
077 440 9920

தகவல் :
குடும்பத்தினர்

(C-4613)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 181, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.